www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டு பொதுத்தேர்வு - 2023

A வேலூர் மாவட்டம்

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி பகுதி - I (மதிப்பெண்கள் : 15) மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந்+தமிழ்+நா ஆ) எம்+தமிழ்+நா இ) எந்த+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா
4. பெரிய மீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை
5. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது ________.
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
6. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ________.
அ) வேற்றுமை உருபு ஆ) உவம உருபு இ) எழுவாய் ஈ) உரிச்சொல்
7. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
8. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
9. அருந்துணை என்பதைப் பிரித்தால் ________.
அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அரு+இணை
10. மொழி ஞாயிறு என்று அழைக்கப்படும் பெருமைக்குரியவர்
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார்
இ) தமிழழகனார் ஈ) தேவநேயப்பாவாணர்
11. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

*பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.*

காற்றே, வா
எமது உயிர் - நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு
சக்தி குறைந்துபோய், அதனை அவித்து விடாதே
பேய் போல வீசி அதனை மடித்து விடாதே,
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு.
உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்
உன்னை வழிபடுகின்றோம்

12. இப்பாடலின் ஆசிரியர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) இடைக்காடனார் ஈ) தமிழழகனார்

13. லயத்துடன் என்ற சொல்லின் பொருள்
அ) சீராக ஆ) வேகமாக இ) தொலைவாக ஈ) இனிமையாக

14. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக.
அ) தருமாறு, விடாதே ஆ) நெடுங்காலம், கொண்டிரு
இ) வீசு, விடாதே ஈ) அவித்து விடாதே, மடித்து விடாதே

15. உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள்
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 x 2 = 8
**21ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
அ) தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்கள்.
ஆ) "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" - என்று பாரதி பெருமைப்படுகிறார்.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. கம்பனைப் பற்றிய புகழ்மொழிகள் இரண்டினை எழுதுக.

19. மாஅல் - பொருளும், இலக்கண குறிப்பும் தருக.

20. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

21. 'செயல்' என நிறைவேறும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 x 2 = 10

22. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுது.
அ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை. ஆ) ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) ஒரு பானை ________. ஆ) உப்பில்லா ________.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : அமர்ந்தான்

25. கலைச்சொற்கள் தருக :
அ) Vowel - ______ ஆ) Storm - ______

***குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா***
**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வாள், பொன், பூ

26. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள நூலின் பெயரை எழுதுக.
இ__கு (பறவையிடம் இருப்பது)
கு__தி (சிவப்பு நிறத்தில் இருப்பது)
வா__ (மன்னரிடம் இருப்பது)
அ__கா (தங்கைக்கு மூத்தவள்)
ம__ (அறிவின் மறுபெயர்)

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பட__ (நீரில் செல்வது)

27. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

28. தீவக அணியின் வகைகள் யாவை?

பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும், குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.
அ) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது?
ஆ) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
இ) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?

31. அறிவினா, ஐய வினா - விளக்குக.

பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

**34 -ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை காட்டும் செய்தியை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக :
அ) "சிறுதாம்பு தொடுத்த" - எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக. *(அல்லது)*
ஆ) "அருளைப் பெருக்கி" - எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்

பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

35. 'கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு ! - *இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர்வகைகளை எழுதுக.*

36. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் - *இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.*

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25**

38. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை எழுதுக.

*(அல்லது)*

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

www.Padasalai.Net

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

*(அல்லது)*

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப்பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நூலக உறுப்பினர் படிவத்தை எழுதுக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்து கொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக.

*(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்கவும் :

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - Nelson Mandela
2. Language is the roadmap of a culture. It tells you where its people come from and where they are going. - Rita Mae Brown

*குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான வினா.*

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பாரதியின் வசன நடை - சிட்டுக்குருவி.

சிறுதானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண். மற்றொன்று பெண்.

அ) சிட்டுக்குருவியின் முதுகு குறித்து பாரதி கூறுவது என்ன?
ஆ) பாரதியின் வீட்டில் எத்தனை சிட்டுக்குருவிகள் இருந்தன?
இ) சிட்டுக்குருவியின் மூக்கு எப்படி இருந்தது?
ஈ) உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடரை எழுதுக.
உ) உமக்குப் பிடித்த பொருள் குறித்து வசன நடையில் இரண்டு வரிகள் எழுது.

## பகுதி - V (மதிப்பெண்கள் 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். **3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம்பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. *(அல்லது)*

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரி.

*(அல்லது)*

ஆ) மேரியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை எழுதுக.

*குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.*

45. அ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் :

முன்னுரை - பிறப்பும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - கல்பனா சாவ்லாவின் மறைவு - முடிவுரை. *(அல்லது)*

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வினைக் கட்டுரையாக்குக.

குறிப்புகள் : முன்னுரை - அரசு பொருட்காட்சி - அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை

******

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

**காலாண்டு பொதுத்தேர்வு - 2023**

**பத்தாம் வகுப்பு - தமிழ்**

**அரசு மேல்நிலைப் பள்ளி, சோழவரம், வேலூர் மாவட்டம்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1 *"காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்"* நிலத்துக்கு நல்ல உரங்கள். - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது = **சருகும் சண்டும்**

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை = **மணி வகை**

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் = **எம்+தமிழ்+நா**

4. *பெரிய மீசை* சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின வகை எது? **அன்மொழித் தொகை**

5. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது = **சிற்றூர்**

6.அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது = **வேற்றுமை உருபு**

7. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

**வானத்தையும் பேரொலியையும்**

8. பாரத ஸ்டேட வங்கியின் உரையாடு மென்பொருள் எது? = **இலா**

9. அருந்துணை என்பதைப் பிரித்தால் = **அருமை+துணை**

10. மொழி ஞாயிறு என்று அழைக்கப்படும் பெருமைக்குரியவர்=**தேவநேயப்பாவாணர்**

11. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?= **தளரப் பிணைத்தால்**

**பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12.13,14,15) விடை தருக.**

*காற்றே, வா*

*எமது உயிர் - நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு*

*நன்றாக வீசு*

*சக்தி குறைந்துபோய், அதனை அவித்து விடாதே*

*பேய் போல வீசி அதனை மடித்து விடாதே,*

*மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு.*

*உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்.*

*உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்*

*உன்னை வழிபடுகின்றோம்*

12. இப்பாடலின் ஆசிரியர் **பாரதியார்**

13. லயத்துடன் என்ற சொல்லின் பொருள்

**சீராக**

14. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக:**அவித்து விடாதே, மடித்து விடாதே**

15. *உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்*

*உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்* - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் **மோனை, எதுகை**

**அனைத்து வினாக்களுக்கு விடையளி:**

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்கள்.

**தமிழர் எத்தகைய இயல்புடையவர்கள்?**

www.Padasalai.Net

ஆ) "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" - என்று பாரதி பெருமைப்படுகிறார்.

**"கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பெருமைப்படுபவர் யார்?**

**17. வசன கவிதை - குறிப்பு வரைக.**

உரைநடையும், கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை.

**18. கம்பனைப் பற்றிய புகழ்மொழிகள் இரண்டினை எழுதுக.**

1. கல்வியில் பெரியவர் கம்பர்.

2. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்

**19. மாஅல் - பொருளும், இலக்கண குறிப்பும் தருக.**

மாஅல் (பொருள்) – **திருமால்.**

**மாஅல் (இலக்கண குறிப்பு) -** செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை)

**20. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

**அ) உழவர்கள் மலையில் உழுதனர்.**

*உழவர் **வயலில்** உழுதனர்.*

**ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.**

***நெய்தல்** பூச்செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.*

**21. 'செயல்' என நிறைவேறும் திருக்குறளை எழுதுக.**

*செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்*

*தியற்கை அறிந்து செயல்.*

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

**22. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுது.**

அ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை.

***நான்கு (4) = ச***

ஆ)ஐந்துசால்பு ஊன்றிய தூண்

***ஐந்து (5) = ரு***

**23. பழமொழிகளை நிறைவு செய்க**

**அ) ஒரு பானை** *சோற்றுக்கு ஒரு சோறு பதம்.*

**ஆ) உப்பில்லா** *பண்டம் குப்பையிலே.*

**24. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அமர்ந்தான்** - அமர் + த்(ந்)+த்+ ஆன்

**அமர்** – பகுதி

**த்(ந்)** - சந்தி

**ந்** -ஆனது விகாரம்

**த்** - இறந்த கால இடைநிலை

**ஆன்** - ஆண்பால் வினை முற்று விகுதி

**25. கலைச்சொற்கள் தருக :**

**அ) Vowel -** உயிரெழுத்து

**ஆ) Storm** - புயல்

**26. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள நூலின் பெயரை எழுதுக.**

இ_கு (பறவையிடம் இருப்பது) **(இறகு)**

கு_தி (சிவப்பு நிறத்தில் இருப்பது) **(குருதி)**

வா_(மன்னரிடம் இருப்பது) **(வாள்)**

அ_கா (தங்கைக்கு மூத்தவள்) **(அக்கா)**

ம_ (அறிவின் மறுபெயர்) **(மதி)**

பட__ (நீரில் செல்வது) **(படகு)**

**நூலின் பெயர்** : **<u>திருக்குறள்</u>**

**<u>27. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.</u>**

***அ) மனக்கோட்டை***

படிக்காமல் தேர்ச்சி பெறலாம் என *மனக்கோட்டை* கட்டினான்.

***ஆ) கண்ணும் கருத்தும்***

*கண்ணும் கருத்துமாகப்* படித்ததால் முதல்மதிப்பெண் பெற்றான்.

**<u>28. தீவக அணியின் வகைகள் யாவை?</u>**

முதல் நிலை தீவகம், இடை நிலை தீவகம் , கடை நிலை தீவகம்.

**<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி:</u>**

**<u>29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுப்போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.</u>**

1. காட்டில் பனைவடலி நடப்பட்டது

2. தோட்டத்தில் மாங்கன்று நடப்பட்டது.

3. சோளப் பைங்கூழ் வளர்ந்து வருகிறது

4. புளியங்கன்று சாலை ஓரத்தில் வளர்ந்து வருகிறது.

5.தோட்டத்தில் தென்னம்பிள்ளை வளர்த்தேன்

**<u>30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.</u>**

"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும், குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

**அ) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது?**

**விடை:** *போலச்செய்தல்*

**ஆ) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

**விடை:** *புரவி ஆட்டம், புரவி நாட்டியம்*

**இ) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?**

**விடை:** *மராட்டியர்*

**<u>31. அறிவினா, ஐய வினா - விளக்குக.</u>**

**அறிவினா:** தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை தான் பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.

**ஐய வினா:** ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது.

**<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி:</u>**

**<u>32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.</u>**

**<u>தமிழ்:</u>**

1. முத்தமிழாக வளர்ந்தது.

2. முச்சங்களால் வளர்க்கப்பட்டது.

3. ஐம்பெருங்காப்பியங்கள்- அணிகலன்கள்.

4.சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

**<u>கடல்</u>**:

1. முத்தினைத் தருகிறது.

2.மூன்று சங்குகளைத் தருகிறது.

www.Padasalai.Net

3.பெரும் வணிகக் கப்பல்.

4.சங்கினைத் தடுத்து காக்கிறது

**33. "மாளாத காதல் நோயாளன் போல" என்னும் தொடரில் உள்ள உவமை காட்டும் செய்தியை விளக்குக.**

மருத்துவர் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என நோயாளி மருத்துவரை நேசிப்பார். அதுபோல நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அருளையே எதிர்பார்த்து வாழ்கிறேன்.

**34. அடிபிறழாமல் எழுதுக :**

**அ) *"சிறுதாம்பு தொடுத்த"* - எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக**

**முல்லைப்பாட்டு**

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*

*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*

*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய*

*கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர*

*இன்னே வருகுவர், தாயர்" என்போள்*

*நன்னர் நன்மொழி கேட்டனம் '*

- நப்பூதனார்

**ஆ) "அருளைப் பெருக்கி" - எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்.**

**நீதிவெண்பா**

*அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*

*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*

*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*

*பொருத்துவதும் கல்வியென்றே போற்று.*

- கா.ப.செய்குதம்பிப் பாவலர்.

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

35. ***'கண்ணே கண்ணுறங்கு!***

***காலையில் நீயெழும்பு !***

***மாமழை பெய்கையிலே !***

***மாம்பூவே கண்ணுறங்கு !***

***பாடினேன் தாலாட்டு !***

***ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !*** **- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர்வகைகளை எழுதுக.**

கண்ணே கண்ணுறங்கு - **விளித்தொடர்**

மாமழை - **உரிச்சொல் தொடர்**

மாம்பூவே - **விளித்தொடர்**

பாடினேன் தாலாட்டு - **வினைமுற்றுத் தொடர்**

ஆடி ஆடி - **அடுக்குத் தொடர்.**

**36. தற்குறிப்பேற்ற அணியை விளக்கு.**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ.கா.**

*'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி*

*'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'*

**பாடலின் பொருள்:**

கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

***37.பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்***

***பொருளல்ல தில்லை பொருள்.***

www.Padasalai.Net

**இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

**சீர் - அசை - வாய்பாடு**

1. பொரு / ளல் - *நிரை நேர்* - **புளிமா.**

2. லவ / ரைப் - *நிரை நேர்* - **புளிமா.**

3. பொரு / ளா / கச் - *நிரை நேர் நேர்* - **புளிமாங்காய்.**

4. செய் / யும் - *நேர் நேர்* - **தேமா**.

5. பொரு / ளல் / ல - *நிரை நேர் நேர்* - **புளிமாங்காய்.**

6. தில் / லை - *நேர் நேர்* - **தேமா**.

7. பொருள் - *நிரை* - **மலர்.**

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிவடையும்.

**<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி:</u>**

**<u>38.அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை எழுதுக.</u>**

**குறிப்புச் சட்டம்**

*வரவேற்பு*

*விருந்து உபசரிப்பு*

*நகர் வலம்*

*இரவு விருந்து*

*பிரியா விடை*

**<u>வரவேற்பு:</u>**

என் இல்லத்திற்கு வந்த உறவினர்களை வருக,வருக என மகிழ்ச்சியாக வரவேற்றேன்.

அவர்கள் அமர்வதற்கு இருக்கையை சுத்தப்படுத்திக் கொடுத்தேன்.

வந்தவர்களுக்கு முதலில் நீர் அருந்தத் தந்தேன்

**<u>விருந்து உபசரிப்பு :</u>**

வந்தவர்களுக்கு கறியும், மீனும் வாங்கி வந்தேன்.

மாமிச உணவை வாழை இலையில் பரிமாறினேன்.

அவர்கள் உண்ணும் வரை அருகில் இருந்து அவர்களுக்குத் தேவையானவற்றை பார்த்துப் பார்த்து கவனித்தேன்.

**<u>நகர்வலம் :</u>**

விருந்து முடித்து, எங்கள் ஊரின் சிறப்புகளை கூறினேன்.

ஊரின் சிறப்புமிக்க இடங்களுக்கு சென்று அவற்றை உறவினர்களோடு கண்டு களித்தேன்.

**<u>இரவு விருந்து:</u>**

நகர்வலம் முடித்து, இரவு விருந்துக்கு தேவையானவற்றை செய்தேன்.

இரவில் இரவு நேரத்திற்கு ஏற்ற உணவுகளை விருந்துப் படைத்தேன்.

**<u>பிரியா விடை:</u>**

இரவு விருந்து முடித்து அவர்கள் தங்கள் ஊருக்கு செல்வதாக கூறினர்.

எனக்குப் பிரிய மனமில்லாமல் அவர்கள் கூடவே பேருந்து நிறுத்தம் வரை சென்று வழி அனுப்பிவிட்டு வந்தேன்.

**<u>38. ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.</u>**

**குறிப்புச் சட்டம்**

*முன்னுரை*

*மழை மேகம்*

www.Padasalai.Net

*மழைப் பொழிவு*

*மாலைப் பொழுது*

*நற்சொல் கேட்டல்*

*ஆற்றுப்படுத்துதல்*

**முன்னுரை:**

முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை நாம் கட்டுரை வடிவில் காணலாம்.

**மழை மேகம்:**

திருமால் மாவலி மன்னனுக்கு நீர் வார்த்து தரும் போது விண்ணுக்கும் மண்ணுக்கும் பேருருவம் எடுத்தது போல் மழை மேகம் உயர்ந்து நின்றது.

**மழைப் பொழிவு:**

கடலின் குளிர் நீரைப் பருகி, மலையைச் சூழ்ந்து விரைந்த வேகமாய் பெருமழைப் பொழிகிறது.

**மாலைப் பொழுது :**

வண்டுகளின் ஆரவாரம் கொண்ட அரும்புகள்.

முதுப் பெண்கள் மாலை வேலையில் முல்லைப் பூக்களோடு, நெல்லையும் தெய்வத்தின் முன் தூவினர்.

**நற்சொல் கேட்டல்:**

முதுப்பெண்கள் தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

இது விரிச்சி என அழைக்கப்படும்.

**ஆற்றுப்படுத்துதல் :**

இடைமகள் பசியால் வாடிய இளங்கன்றை காணல். உன் தாய்மாரை எம் இடையர் இப்போது வந்து விடுவர் எனக் கூறல். முதுப் பெண்கள் இந்த நற்சொல்லை நாங்கள் கேட்டோம். உன் தலைவன் வந்து விரைந்து வந்துவிடுவான் என ஆற்றுப்படுத்தினர்.

**முடிவுரை**

இவ்வாறு முல்லைப் பாட்டில் மழைமேகம், மழைப்பொழிவு, மாலைப் பொழுது, நற்சொல் கேட்டல், ஆற்றுப்படுத்துதல் என செய்திகளை கண்டோம்.

**39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

வேலூர்

19-09-2023

அன்புள்ள நண்பனுக்கு,

நான் நலம். நீ அங்கு நலமா? என அறிய ஆவல்."மரம் இயற்கையின் வரம்" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நீ முதல் பரிசு பெற்றது மிக மகிழ்ச்சியாக உள்ளது. மனமார வாழ்த்துகிறேன். நீ இன்னும் பல பரிசுகள் பெற வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

உன் அன்பு நண்பன்,

அகிலன்

**உறைமேல் முகவரி;**

பெறுதல்

திரு.இரா. செந்தில்,

14, பாரதி தெரு,

வேலூர்.

**39. ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து**

www.Padasalai.Net

**உரிய சான்றுகளுடன் உணவுப்பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக**

அனுப்புநர்

அ. இனியன்,

24, முருகன் கோவில் தெரு,

சோழவரம்,

வேலூர் 632 113.

பெறுநர்

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,

உணவு பாதுகாப்பு ஆணையம்,

வேலூர் 632 001.

ஐயா,

பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் - சார்பு

வணக்கம். நான் நேற்று வேலூரில் செந்தில் உணவகத்தில் கோழி பிரியாணி உண்டேன். அது கெட்டுப் போனதாகவும் மேலும் அதன் விலைப்பட்டியலைவிட விலைக் கூடுதலாகவும் இருந்தது. இத்துடன் அந்த உணவிற்கான விலை இரசீது நகல் மற்றும் உணவு பட்டியல் நகலையும் இணைத்துள்ளேன். தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

நன்றி.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

அ. இனியன்

**இணைப்பு:**

1.விலை இரசீது - நகல்

2.விலைப்பட்டியல் - நகல்

**இடம் :** வேலூர்

**நாள்:** 19-09-2023

**உறை மேல் முகவரி:**

பெறுநர்

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,

உணவு பாதுகாப்பு ஆணையம்,

வேலூர் 632 001.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

*உள்ளிழுக்கும் மூச்சே உயிர் மூச்சு*

*மூச்சு மட்டும் இல்லையென்றால் ஏதுபேச்சு*

*மரத்தை நட்டுக் காப்போம் காற்றை*

*ஆழ்ந்து இழுத்து விடுவோம் மூச்சை*

*அல்லல் படாமல் வாழ்ந்திடுவோம் வாழ்க்கை என்றும் அவதிப்படாமல் காத்திடுவோம் வளிமண்டலத்தை..!*

**41. நூலக உறுப்பினர் படிவத்தை எழுதுக.**

**42.அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்து கொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக**

**பள்ளியில் நான்**

1. நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன்

2. ஆசிரியர் சொல்படி நடப்பேன்

3. ஆசிரியரிடம் பணிவுடன் நடந்துக்கொள்வேன்.

4.நண்பர்களுடன் கலந்து உரையாடுவேன்.

5.நண்பர்களுக்கு உதவிகள் செய்வேன்.

**வீட்டில் நான்**

1.அதிகாலையில் எழுதல்.

2. பெற்றோர் சொல்படி நடப்பேன்.

www.Padasalai.Net

3.பெரியவர்களிடம் பணிவுடன் நடந்துக்கொள்வேன்.

4.உறவினர்களுடன் கலந்து உரையாடுவேன்.

5. பெற்றோருக்கு உதவிகள் செய்வேன்.

**42. ஆ) மொழிபெயர்க்கவும்**

**1. If you talk to a man in a language he understand,thats goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mendela**

ஒருவரிடம் அவர் புரிந்து கொள்ளக் கூடிய ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அது அவருடைய மூளையை சென்றடைகிறது.அதுவே அவர் தாய் மொழியில் பேசினால் அது அவருடைய இதயத்தைச் சென்றடைகிறது - நெல்சன் மண்டேலா.

**2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown**

மொழி என்பது கலாச்சாரத்தின் வழிகாட்டி, அதுவே அம்மொழி பேசும் மக்கள் எங்கிருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதை உணர்த்தும் - ரீடா மேக் ப்ரௌன்

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

**43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

வழக்கத்தில் பல ஆங்கில சொற்களை தமிழோடு இணைத்து பேசவும், எழுதவும் செய்வதை தவிர்க்க புதிய சொல்லாக்கம் தேவை.

தொழில் நுட்பம் சார்ந்த பல சொற்களை தமிழில் பயன்படுத்த சொல்லாக்கம் தேவை.

தாவரத்தின் அனைத்து நிலைகளுக்கும் தமிழில் சொற்கள் உண்டு.

புதிய தமிழ்ச்சொல்லாக்கம் தமிழ் மொழியை அழியாமல் பாதுகாக்கிறது.

மொழியின் மூலம் நாட்டாரின் நாகரிகத்தையும்,நாட்டு வளத்தின் மூலம் மொழிவளத்தினை அறியலாம்.

**43. ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக.**

**குறிப்புச்சட்டம்**

*முன்னுரை*

*மன்னனும் இடைக்காடனும்*

*இறைவனிடம் முறையிடல்*

*இறைவன் நீங்குதல்*

*மன்னன் முறையிடல்*

*புலவனுக்கு சிறப்பு செய்தல்*

*முடிவுரை*

**முன்னுரை**

கபிலரின் நண்பர் இடைக்காடனரை மன்னன் இகழ்ந்ததன் பொருட்டு இறைவன புலவனின் குரலுக்கு செவி சாய்த்த நிகழ்வைக் இக்கட்டுரையில் காண்போம்.

**மன்னனும் இடைக்காடனும்**

மன்னன் குசேலேப் பாண்டியன் முன் இடைக்காடன் தன் கவிதையை பாடினார்.

மன்னன் அதனை பொருட்ப்படுத்தாமல் இகழ்ந்தார்.

புலவன் அங்கிருந்து வெளியேறினார்.

www.Padasalai.Net

**இறைவனிடம் முறையிடல்**

இடைக்காடன் இறைவனிடம் முறையிடல்

மன்னன் தன்னை இகழவில்லை.

இறைவனான உன்னை இகழ்ந்தான்.

**இறைவன் நீங்குதல்**

இறைவன் இதனைக் கண்டு கடம்பவன கோயிலை விட்டு நீங்கினார்.

வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோயிலில் சென்றார்.

**மன்னன் முறையிடல்:**

மன்னன் இறைவன் நீங்கியதைக் கண்டு வருத்தம் அடைந்தான்.

இடைக்காடன் பாடலை இகழ்ந்தது தவறு தான் பொறுத்தருள வேண்டினான்.

**புலவனுக்கு சிறப்பு செய்தல்:**

மன்னன் இடைக்காடனாரிடம் தன்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டுதல்.

இறைவன் சொல் கேட்டு இடைக்காடனுக்கு மன்னன் சிறப்பு செய்தான்.

**முடிவுரை:**

மன்னனின் சொல் கேட்ட புலவர்களின் கோபம் தணிந்தது. இடைக்கானார் புலவரின் பாடலை இகழ்ந்தன் காரணமாக இறைவன் புலவனின் குரலுக்குச் செவிச்சாய்த்தார்.

**44. அ) 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரி.**

**குறிப்புச் சட்டம்**

*முன்னுரை*

*புயல் வருணனை*

*அடுக்குத் தொடர்*

*ஒலிக் குறிப்பு*

***முடிவுரை***

**முன்னுரை**

புயலிலே ஒரு தோணியில் பா.சிங்காரம் எழுதியுள்ள புயல் வருணனை, அடுக்குத் தொடர், ஒலிக் குறிப்பு பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**புயல் வருணனை :**

கொளுத்தும் வெயில்

மேகங்கள் கும்மிருட்டு

இடி முழக்கம் வானத்தைப் பிளந்தது.

மலைத் தொடர் போன்ற அலைகள்

வெள்ளத்தால் உடை உடலை ரம்பமாய் அறுக்கிறது

**அடுக்குத் தொடர் :**

நடுநடுங்கி

தாவி தாவி

குதி குதித்தது

இருட்டிருட்டு

விழுவிழுந்து

**ஒலிக் குறிப்பு:**

கடலில் சிலுசிலு, மரமரப்பு

நொய்ங், புய்ங் நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங்

**முடிவுரை :**

பகல் இரவாகி உப்பக்காற்று உடலை வருடியது.

www.Padasalai.Net www.CBSEtips.in



அடுத்த நாள் பினாங்கு துறைமுகத்தை அணுகினார்கள்.

**44. ஆ) மேரியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை எழுதுக.**

**குறிப்புச்சட்டம்**

*முன்னுரை*

*மேரி*

*அவமானம்*

*புதிய நம்பிக்கை*

*கல்வி*

*உதவிக்கரம்*

*மேல்படிப்பு*

*முடிவுரை*

**முன்னுரை:**

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மேரி**

சாம் - பாட்ஸி இணையருக்கு மகளாகப் பிறந்தவள் மேரி.

பருத்திக்காட்டில் வேலை செய்து தங்கள் குடும்பத்தை நடத்துகிறார்கள்.

**அவமானம்:**

மேரி பாட்ஸியுடன் பென்வில்ஸன் வீட்டிற்கு செல்கிறார்கள்.

மேரி அந்த வீட்டின் அலமாரியிலிருந்த புத்தகத்தை எடுக்கிறாள்.

பென்வில்ஸன் இளையமகள் அவளிடமிருந்து புத்தகத்தை பிடிங்கினாள்.

உனக்கு படிக்கத் தெரியாது என கூறினாள்.

மேரி மனம் துவண்டாள்.

**புதிய நம்பிக்கை**

மேரிக்கு படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டானது.

ஒரு நாள் மிஸ் வில்ஸன் என்பவர் " உன் போன்ற குழந்தைகள் படிக்க வேண்டும். நீ சீக்கிரமாக மேயெஸ் வில்லிக்கு வர வேண்டும்.

மேரிக்கு புதிய நம்பிக்கை பிறந்தது.

**கல்வி:**

மேரி ஐந்து மைல்கள் நடந்து சென்று கல்வி கற்றாள்.

சில வருடங்கள் கழித்து மேரிக்கு பட்டமளிப்பு விழா நடந்தது.

அதில் "இந்த பட்டம் பெறும் மாணவர் எழுதவும் படிக்கவும் கூடியவர்" என எழுதப்பட்டிருந்தது.

**உதவிக்கரம்**

மிஸ்வில்சன் மூலம் மேரிக்கு மீண்டும் ஒரு நல்ல செய்தி.

அவளின் மேல்படிப்பு செலவுக்காக மேற்குப் பகுதியில் வாழ்கின்ற வெள்ளைக்கார பெண் மணி பணம் அனுப்பி இருக்கிறார்.

அவள் மேல் படிப்புக்காக டவுணுக்கு செல்கிறாள்.

**மேல்படிப்பு**

மேரியை மேல்படிப்பு படிப்பதற்காக இரயில் நிலையத்தில் அவளது கிராமமே வழியனுப்ப திரண்டு வந்தது.

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

மிஸ் வில்ஸனும் இரயில் நிலையத்தில் வந்தார்கள்.

**முடிவுரை**

எப்படிப்பட்ட நிலையிலும் கல்வி நம்மை உயர்த்தும் என்பதற்கு மேரியின் வாழ்க்கையை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். மேரியிடமிருந்து பறிக்கப்பட்டப் புத்தகம் அவள் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றியது என்பதனை இக்கட்டுரை வழியாகக் கண்டோம்.

**குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**45. அ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்:**

*முன்னுரை- பிறப்பும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - கல்பனா சாவ்லாவின் மறைவு - முடிவுரை.*

**தலைப்பு - விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**

**குறிப்புச் சட்டம்**

*முன்னுரை*

*பிறப்பும்,கல்வியும்*

*விண்வெளிப் பயணம்*

*இறப்பு*

*விருது*

*முடிவுரை*

**முன்னுரை:**

விண்வெளிக்கு பயணம் செய்த முதல் இந்திய பெண் வீராங்கனை கல்பனா சாவ்லா குறித்து நாம் இக்கட்டுரையில் காணலாம்.

**பிறப்பும், கல்வியும்:**

**பிறப்பு:** இந்தியாவில் ஹரியானா மாநிலத்தில் கர்னலில் ஜூலை 1,1961 இல் பிறந்தார்.

**பெற்றோர்:** பனாரஸ்லால் - சன்யோகிதா தேவி

**கல்வி:** கர்னலில் பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப் பட்டம்

டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளி பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம்.

1986-ஆம் ஆண்டு கொலராடோ பல்கலைக் கழகத்தில் 2-ஆவது முதுகலைப்பட்டம்.

பிறகு 1988-ஆம் ஆண்டு விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

**விண்வெளிப் பயணம்:**

1995 இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சியில் இணைந்து கொலம்பிய விண்வெளி ஊர்தி எஸ்,டி,எஸ்-87 இல் பயணம் செய்தார்,

சுமார் 372 மணிநேரம் விண்வெளியில் இருந்து சாதனையுடன் பூமி திரும்பினார்.

**வீர மரணம்:**

2003இல் ஜனவரி 16 ந் தேதி அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பிய விண்கலம் எஸ்.டி.எஸ் 107 இல மீண்டும் பயணம் செய்தார்.

அந்த விண்கலம் ஆய்வை முடித்து திரும்பிய போது பிப்ரவரி -1 இல் டெக்சாஸ் வான்வெளியில் வெடித்துச் சிதறியதில் கல்பனா சாவ்லாவுடன் உடன் பயணித்த 7 வீரர்களும் மரணமடைந்தனர்

**விருது:**

www.Padasalai.Net

நியூயார்க் நகரின் ஒரு சாலைக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிப்ரவரி 1ந் தேதி கல்பனா சால்வலா நினைவு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

2011 முதல் வீரதீர சாதனைப் புரிந்த பெண்களுக்கு "கல்பனா சாவ்லா விருது" அரசு வழங்கி வருகிறது.

**முடிவுரை.**

மாணவர்களாகிய நாமும் இவரைப் போன்றவர்களை உதாரணமாகக் கொண்டு விடாமுயற்சியுடன் படித்தால் அனைத்தையும் சாதிக்கமுடியும்.

**45. ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வினைக் கட்டுரையாக்குக.**

**குறிப்புகள் :** *முன்னுரை - அரசு பொருட்காட்சி - அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை*

**குறிப்புச்சட்டகம்**

*முன்னுரை*

*பொருட்காட்சி*

*நுழைவுச் சீட்டு*

*பல்துறை அரங்கம்*

*அங்காடிகள்*

*பொழுதுபோக்கு*

*முடிவுரை*

**முன்னுரை:**

எங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை இக்கட்டுரையில் காண்போம்.

**பொருட்காட்சி**

மக்கள் அதிகமாக கூடும் இடத்தில் பொருட்காட்சி நடைபெற்றது.

**நுழைவுச் சீட்டு:**

பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டது.பெரியவர்களுக்கு 30 ரூபாயும்,சிறுவர்களுக்கு 15 ரூபாயும் என நுழைவுச்சீட்டு நிர்ணயம் செய்யப்பட்டது.

**பல்துறை அரங்கம்:**

அரசின் சாதனைகள் கூறும் பல்வேறு அரசுத்துறை அரங்கங்களும்,தனியார் பொழுது போக்கு நிறுவனங்களும் நிறைய இருந்தன.

**அங்காடிகள்:**

வீட்டு உபயோகப் பொருட்கள்,விளையாட்டுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் என பல்வேறு பொருட்களும் ஒரே இடத்தில் கிடைத்தன.

**பொழுதுபோக்கு :**

சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாட பொம்மை அரங்கம் போன்ற பல்வேறு அரங்கங்களும்,இராட்டினங்களும் நிறைய இருந்தன.

**முடிவுரை:**

எங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வினை இக்கட்டுரையில் கண்டோம்.

www.Padasalai.Net